### சென்னை – எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில்

# சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு - பன்னாட்டுக் கருத்தரங்கு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துப் பேருரை!

## சர் ஜான் ஹீபர்ட் மார்ஷல் சிலைக்கு அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன.7 -**

**தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு 05.01.2025 முதல் 07.01.2025 வரை மூன்று நாட்கள் சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற்று வருகிறது.**

**இக்கருத்தரங்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று முன்தினம் (05.01.2025) காலை 10.00 மணியளவில் தொடங்கி வைக்கப்பட்டது.**

**மேலும், சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பினை உலகுக்கு அறிவித்த மேனாள் இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநர் சர் ஜான் ஹீபர்ட் மார்ஷல் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அடிக்கல் நாட்டியும், சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்: ஒரு வடிவவியல் ஆய்வு என்ற நூலினை வெளியிட்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.**

சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்து ஆய்வு மையமும் இணைந்து, மூன்று நாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றன.

சிந்துவெளி குறித்து ஐராவதம் மகாதேவன், அஸ்கோ பர்போலா, மார்க் கெனோயர், கிரிகோரி போசெல், ஆர்.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பல அறிஞர்கள் ஆராய்ந்து, நமது புரிதலை வலுப்படுத்தி வந்துள்ளனர்.

**சர் ஜான் மார்ஷலின் பங்களிப்பு!**

கடந்த 100 ஆண்டுகளில் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் எண்ணற்ற சிந்துவெளி நாகரிகம் தொடர்பான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனையொட்டி சிந்துவெளி சார்ந்த புரிதலை ஆழமாக்க வேண்டியது அறிவுலகின் கடமை. சர் ஜான் மார்ஷல் குறித்தும் அவரது பங்களிப்புகள் குறித்தும் ஆய்வுகள் அதிகம் வெளிவராத நிலையில் அதனை ஆய்தல், சிந்துவெளி எழுத்துகளைப் பற்றியும் அதன் விளக்கங்கள் சார்ந்தும் பல ஆராய்ச்சிகள் செய்தல், பண்டைய மரபார்ந்த அடையாளங்களைக் கொண்டு தனித்துவமான கருத்தாக்கங்களை உண்டாக்குதல், சிந்து வெளியைப் புரிந்துகொள்வ தற்கான நவீனத் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தல், மரபணு ஆய்வுகளைப் பயன்படுத்துதல், சிந்துவெளி யின் பொருள்சார் பண்பாட்டை ஆராய்தல் முதலியவற்றின் மூலம் சிந்துவெளி நாகரிகம் குறித்து இன்னும் தெளிவான புரிதலை உண்டாக்க முடியும். மறுபுறம் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தொல்லியல் ஆய்வுகளில் கிடைக்க ப்பெறும் பானை ஓடுகளில் உள்ள கீறல்கள் சிந்துவெளி வரிவடிவங்களோடு ஒப்பீட்டு அளவில் ஒன்றாக இருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டும் இந்தக் கருத்தரங்கம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கண்ணோட்டங்களை ஒன்றிணைப்பதன் மூலமும், பல்துறைசார்ந்த உரையாடலை வளர்ப்பதன் மூலமும், சிந்துவெளி நாகரிகம் பற்றிய நமது புரிதலையும், சமகாலச் சமூகத்தில் காணப்படும் அதன் நீண்ட தொடர்பையும் தெளிவாக்குவதே இந்தக் கருத்தரங்கின் மைய நோக்கமாகும். மேலும், இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கு அறிஞர்கள், தொல்லியலாளர்கள், வரலாற்றாசிரியர்கள், ஆர்வலர்கள் முதலியோரையும் சமீபத்திய அகழாய்வுகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உள்ளிட்டவற்றையும் ஒருங்கிணைத்து, சிந்துவெளிப் பண்பாட்டைப் புரிந்துகொள்வதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு வழிவகை செய்கிறது.

**ஆய்வறிஞர்களின் கருத்துரைகள்!**

இக்கருத்தரங்கில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் கிரெக் ஜேமிசன் சிந்துப் பண்பாட்டின் முத்திரைகள்: நடப்பு பார்வைகள் மற்றும் எதிர்கால இலக்குகள் என்ற தலைப்பிலும் வரலாற்று எழுத்தாளர் டோனி ஜோசப் ஹரப்பா நாகரிகம் கண்டுபிடிப்பு: நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் நிலவும் சில கேள்விகளும் சிக்கல்களும் என்ற தலைப்பிலும், அசோகா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேரா. நயன்ஜோத் லஹிரி சிந்துவெளி நாகரிகம்: ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டுபிடிப்பினைத் திரும்பிப்பார்த்தல் என்ற தலைப்பிலும் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் மதிப்புறு ஆலோசகர் பேரா. ராஜன் சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு என்ற தலைப்பிலும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மைய ஆலோசகர் ஆர். பாலகிருஷ்ணன் சிந்துவெளிப் புதிர்களைப் புரிந்துகொள்ளு தல்: இருமொழி எழுத்துகள் இல்லாத நிலையில் என்ற தலைப்பிலும், ஹரப்பா. காம் நிறுவனர் ஓமர் கான் ஹரப்பா. காம்@30 என்ற தலைப்பிலும், ஐக்கிய இராச்சியம் (UK), டர்காம் பல்கலைக்கழகத் தொல்லியல் ஆய்வறிஞர் முனைவர் கிறிஸ் டோபர் டேவிஸ் மார்ஷல் மீதான புத்தொளி: சர் ஜான் மார்ஷல் அவர்களின் தொல்லியல் அணுகு முறைகளை ஆராய்தல் என்ற தலைப்பிலும் கருத்துரைகள் வழங்குகின்றனர்.

மேலும், மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இக்கருத்தரங்கில் வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த 24 ஆய்வாளர்கள் - தொல்லியலாளர்கள் சிந்துவெளி நாகரிகம் மற்றும் இந்தியத் துணைக் கண்டத்தின் இதர நாகரிகங்கள், பண்பாடுகள் குறித்துப் பல்வேறு தலைப்புகளில் தங்களது ஆய்வுரைகளை வழங்குகின்றனர். மூன்று நாட்கள் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் பொதுமக்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் நேரலையில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

மேலும், இத்தொடக்க விழா நிகழ்ச்சியில் நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர், தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மைய ஆலோசகர் ஆர்.பாலகிருஷ்ணன், பேரா. கிரெக் ஜாமிசன், பேரா.கா. ராஜன், பேரா.நயன்ஜோத் லஹிரி, டோனி ஜோசப் போன்ற அறிஞர் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பு செய்கின்றனர்.

இத்தொடக்க விழா நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சி மேயர், அரசு உயர் அலுவலர்கள், தொல்லியல் வல்லுநர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், பொதுமக்கள் மற்றும் ஊடகத்துறையினர் கலந்து கொண்டனர்.

---

### அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா! தமிழிருக்கும் வரை

# அய்யன் வள்ளுவர் சிலையும், அதை நிறுவிய கலைஞர் பெயரும் நிலைத்திருக்கும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஜன. 7 -

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரிக் கடலில் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆனதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் தந்தையின் அடியொற்றி 3 நாட்கள் வெள்ளி விழா எடுத்தார். தமிழிருக்கும் வரை அய்யன் வள்ளுவர் சிலையும் அதை நிறுவிய கலைஞர் பெயரும் என்றும் நிலைத்து இருக்கும் என “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

அது வருமாறு:

”வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று பாடினார், மகாகவி பாரதியார். ‘திருக்குறளை அதன் மூல வடிவில் படிப்பதற்காக நான் தமிழை படிக்க விரும்புகிறேன்’ என்றார், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள். திருக்குறளை ஞான திருவிளக்கு’ என்றார், வீரமா முனிவர். ”எல்லா நூல்களையும் விட சிறந்தது திருக்குறள்” என்றார், ஜி.யு.போப். ‘திருக்குறளின் பெருமை தெரியாதவரை நான் மதிப்பதுமில்லை, நேசிப்பதுமில்லை என்றார், சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சி. ஏன் பிரதமர் நரேந்திர மோடியும், தான் கலந்துகொள்ளும் சர்வதேச மாநாடுகளிலும், கூட்டங்களிலும் திருக்குறளை மேற்கோள் காட்டி பேசுவதுண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாக முத்தமிழறிஞர் கலைஞர், ‘திருவள்ளுவரே தனது உலகம். அவர் எழுதிய திருக்குறளே தனது வாழ்க்கை’ என்று வாழ்ந்தார். பள்ளி மாணவனாக கலைஞர் இருந்தபோது நடந்த பேச்சுப்போட்டியில், ’நட்பு’ என்ற தலைப்பில் பேசும்போது திருக்குறளைத் தான் மேற்கோள் காட்டி பேசியிருக்கிறார். தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பாகவே சட்டமன்றத்தில் வாதாடி, சட்டசபையில் திருவள்ளுவர் படம் வைக்க வைத்தவர் அவரே. போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தபோது அனைத்து


தலையங்கம்
தினத்தந்தி
6.1.2025 (திங்கட்கிழமை)
அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா!


பஸ்களிலும் திருக்குறள் எழுதப்படவேண்டும் என்று உத்தரவிட்டு செயல்படுத்தினார்.

பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, அனைத்து அரசு விடுதிகளிலும் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் இடம்பெறச் செய்தார். காவலர் பதக்கங்களில் வள்ளுவர் உருவத்தை பொறித்தார். மயிலாப்பூரில் நினைவாலயம் அமைத்தார். சென்னையில் இன்று எல்லோரும் வியக்கும் வள்ளுவர் கோட்டத்தை அமைத்தார். அவரது எழுத்தில் குறளோவியமும், திருக்குறளின் உரையும் ஒளி வீசுகின்றன. வள்ளுவரை அய்யன் திருவள்ளுவர் என்று அனைவரையும் கூற வைத்தவர் கலைஞர்தான்.

திருவள்ளுவருக்கு கன்னியாகுமரி கடலில் வானுயர்ந்த சிலை அமைக்கவேண்டும் என்று 1975ம் ஆண்டு முடிவு செய்து, திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிக்கும் வகையில், 133 அடி உயரத்தில் கடலின் நடுவே பாறை மீது அமைக்கவும், அறத்துப்பாலில் உள்ள 38 அதிகாரங்களை மனதில் கொண்டு 38 அடி உயரத்தில் சிலையின் பீடமும் அமைக்கப்பட்டது. அது அறப்பிடம் என்று அழைக்கப்படுகிறது. மீதம் உள்ள 95 அடி தான் சிலையின் உயரம். அந்த சிலையின் முகம் மட்டும் 20 அடியாகும். கடல் அலைகள் தாலாட்டும் குமரிக்கடலில் பாறை மீது 133 அடி உயரத்தில் கம்பீரமாக காட்சி அளிக்கும் திருவள்ளுவர் சிலையை 1.1.2000 அன்று அப்போது முதல் -அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். இந்தத சிலை எத்தனையோ பேரிடரின்போதும், குறிப்பாக பேரழிவை ஏற்படுத்திய சுனாமி யின்போது கூட எந்தவித, பாதிப்பும் ஏற்படாமல் ஓங்கி உயர்ந்து நிற்கிறது.

இந்த சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆவதையொட்டி, முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் தந்தையின் அடியொற்றி 3 நாட்கள் வெள்ளி விழா எடுத்தார். நீங்கா புகழ்கொண்ட திருக்குறளை நமக்கு தந்த திருவள்ளுவருக்கு இந்த சிலை ஒரு நினைவாலயம் ஆகும். எப்படி அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலை உலகை அறிவூட்டும் சிலை எனப்படுகிறதோ, அதுபோல குமரிக்கடலில் எழுந்திருக்கிற வள்ளுவர் சிலை பேரறிவு சிலையாக புகழ்பரப்புகிறது. முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் வான் உயர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையை பார்த்து, அவரின் சிறப்புகளை அறிந்து கொள்ள இந்த சிலை தூண்டுகோலாக இருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர்

# பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜன. 7 -

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.**

**ஐயா அவர்கள் நீண்டகாலம் நலத்துடன் திகழ்ந்து தம் பொது வாழ்வுப் பணியைத் தொடர்ந்திட விழைகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# இலவசமாகப் படிக்க, தமிழ் இணைய நூலகத்தில் 80 ஆயிரம் நூல்கள் பதிவேற்றம் ; கலைஞர் செய்த அரும் பணிகளில் இதுவும் ஒன்று!

## சென்னை 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமைகள் - வாசகர்கள் சந்திப்பில் – தமிழன் பிரசன்னா முத்தமிழறிஞர் கலைஞருக்குப் புகழாரம்!




சென்னையில் நடைபெறும் 48வது புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளது இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம். அந்த அரங்கில் திராவிட இயக்க ஆளுமைகள் வாசகர்கள் சந்திப்பு, கலந்துரையாடல் நிகழ்ச்சி நாள் தோறும் நடக்கிறது. இதில் 04.01.2025 அன்று கழக செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

ஒருகாலத்தில் தேநீர் கடைகளிலும், முடிதிருத்த நிலையங்களிலும் அரசியல் பேசிப்பேசி, படிப்பகங்கள் உருவாக்கி, கூட்டங்கள் நடத்தி வளர்ந்த இயக்கம் நமது தி.மு.கழகம். திராவிட நாடு, விடுதலை, முரசொலி போன்ற பெரிய இதழ்கள் மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான சிற்றிதழ்கள் திராவிட இயக்க இரண்டாம் கட்டத் தலைவர்களால் நடத்தப்பட்டு வந்தன.

**ஏன் வாசிக்க வேண்டும்?**

இன்றைக்கும் இளைய தலைமுறையை வாசிக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம், நம் தலைவர்களுக்கு இருக்கிறது. இந்த எண்ணம் எத்தனை அரசியல் தலைவர்களுக்கு இருக்கும் என்று தெரியாது. அதன் வெளிப்பாடுதான் முத்தமிழறிஞர் பதிப்பகம். முத்தமிழறிஞர் பதிப்பகம் உருவாக்கப்பட்டு, குறுகிய காலத்திலேயே பல முக்கியமான படைப்புகளை நூல்களாக வெளிக்கொண்டு வந்துள்ளது.

திராவிட இயக்கம் ஏன் படிப்புக்கு இவ்வளவு முக்கியத்துவம் தருகிறது என்ற எண்ணம் உங்களுக்கு இருக்கலாம். படிப்பதை நாம் கேட்டால்கூட காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றும் நிலை முன்பு இருந்தது. உரிமைகள் அற்றவர்களாக இருந்த நமக்கு, படிக்கின்ற அந்த உரிமையைப் பெற்றுத் தந்தது திராவிட இயக்கம். கற்றறிந்தவர்களாக நாம் இருந்தால் நம் உரிமைகளை எவராலும் பறித்துவிட முடியாது.

**வாசிப்பது எப்படி?**

பயணங்களின்போதும் சரி, மற்ற எல்லா நேரங்களிலும் சரி, மொபைல் போன்கள் பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டு, நூல்களைத் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும். வாசிக்கும் போது மனம் பண்படும், எண்ண ஓட்டங்கள் செழுமையடையும், பேசும் சொற்கள் அர்த்தமுள்ளதாகும். எனவே வாசிக்க வேண்டும்.

நூல்களாக வாங்கித்தான் படிக்க வேண்டுமென்பதில்லை. தமிழ் இணைய நூலகத்தில் கலைஞரின் `நெஞ்சுக்கு நீதி’, `கலைஞரின் சட்டமன்ற உரைகள்’ உட்பட 80 ஆயிரம் நூல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றை இலவசமாகப் படிக்கலாம். கலைஞர் செய்த அரும்பணிகளில் இதுவும் ஒன்று.

அதேபோல, கிண்டிலில் பல தமிழ் நூல்கள் இலவசமாக கிடைக்கின்றன. 5 ரூபாய், 10 ரூபாய்க்கும் பல நூல்கள் கிடைக்கின்றன. அவற்றை பதிவிறக்கம் செய்தும் படிக்கலாம். திராவிடர் கழக பதிப்பகத்தில் 10 ரூபாய், 20 ரூபாய்க்கு பல நல்ல நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மின்னூல்களாகவும் உள்ளன. இவற்றையெல்லாம் நீங்கள் பயன்படுத்தி வாசிப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன்மூலம் திராவிட இயக்கச் சித்தாந்தத்தை உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழன் பிரசன்னா பேசினார்.



தூத்துக்குடி அருகே உள்ள சிறுப்பாடு கிராமத்தில் கால்நடைகளுக்கு 6 ஆவது சுற்று கோமாரிநோய் தடுப்பூசி முகாமினை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் சுமார் 1,15,000 மாட்டினங்களுக்கு இலவசமாக கோமாரி நோய்க்கான 6ஆவது சுற்று தடுப்பூசி போடும் பணி,தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கி 21 நாள்கள் நடைபெறுகிறது. இத்தடுப்பூசி முகாமினை, தூத்துக்குடி அருகே உள்ள சிறுப்பாடு கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சி.சண்முகையா, முன்னாள் எம்.எல்.ஏ. டேவிட்செல்வின், மாநில வர்த்தக அணி இணைச்செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பானு, ஹைகோர்ட் மகாராஜா, கால்நடை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) செல்வக்குமார், ஒன்றிய செயலாளர் ஜெயக்கொடி, துணை செயலாளர் ஹரிபாலகிருஷ்ணன், மாவட்ட வழக்குரைஞரணி அமைப்பாளர் செல்வக்குமார், தொண்டரணி அமைப்பாளர் வீரபாகு, சிறுபாண்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் ராஜா ஸ்டாலின், மாவட்ட பிரதிநிதி வெயில்ராஜ், அவைத்தலைவர் பாலசுந்தரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார் ஏற்பாட்டில் கழக மாநில இளைஞரணி செயலாளர் – தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாம் வலையபட்டி அரசு பள்ளி மாணவ – மாணவியருக்கு நோட்டுக், பேனா, பென்சில் ஆகியவற்றை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழங்கினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எல்.மூக்கையா, போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான், மாவட்ட துணை செயலாளர் கண்ணன், போடி நகர செயலாளர் புருஷோத்தமன், போடி கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் தமிழ்வாணன், பூதிபுரம் பேரூராட்சி தலைவர் கவியரசு, உத்தமபாளையம் முன்னாள் ஒன்றிய செயலாளர் முல்லை சேகர், கோடாங்கிபட்டி கிளைக் கழக செயலாளர் செந்தில் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.